1971 ஜூலை 28] [திரு. என். வி. நடராசன்]

இறுதியாக தொழிலாளர் நல அமைச்சர் என்ற முறையில் அரசின் சார்பில் கீழ்க்கண்டவாறு என் பரிந்துரையைக் கூறினேன் :

(அ) ரூ. 50-ம் அதற்குக் குறைவாக ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 15 ஊதிய உயர்வும்,

(இ) ரூ. 50 முதல் ரூ. 75 வரை ஊதியம் வாங்கும் தொழிலாளிகளுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும்,

(உ) ரூ. 75-க்கு மேல் ஊதியம் பெறுவோருக்கு ரூ. 11 ஊதிய உயர்வும்,

(எ) தொண்டுக் கட்டணத்தில் 5 சதவிகிதத்தில் 80 சதவிகிதமும், மற்றும்

(ஒ) ஏற்கெனவே நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டுள்ள தொழிலாளிகளின் பிரச்சினைகள் தவிர ஏனைய தொழிலாளிகள் அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாடு 1—8—71 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் உடன்பாடு ஏற்பட்டு வேலை நிறுத்தம் முடிவுற்றது. தொழிலாளிகள் 17—7—71-ம் முதல் வேலைக்குத் திரும்பினர்.

* * *

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவை தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டி உரிமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவினை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.